செ.வெ.எண்: 03 நாள்:01.04.2020

**கரூர் மாவட்டம்**

**கொரோனா தொற்று பாதித்த நபர்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவர்களுக்கான பிரத்யேக பாதுகாப்பு உடைகள் கரூரிலேயே தயாரிக்கப்படுகின்றது - தயாரிப்பு நிறுவனத்தை பார்வையிட்டு ஆய்வுசெய்தபின் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப.,அவர்கள் தகவல்**

அதன் விபரம் வருமாறு:

தற்போது உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவர்களுக்கான பிரத்யேக பாதுகாப்பு ஆடையினை (Personal Protective Equipmetnt) கரூர் ஆண்டாங்கோவில் மேற்கு ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அபிநவ் பேப்ரிக்ஸ் என்ற நிறுவனம் தயாரித்து வருகின்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் இன்று (1.04.2020) அபிநவ் பேப்ரிக்ஸ் நிறுவனத்தில் பாதுபாப்பு ஆடை உற்பத்தி செய்யும் பணிகளை பார்வையிட்டர்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

கொரோனா தொற்று சிறப்பு பிரிவில் பணியாற்றும் மருத்துவர்களுக்கான Personal Protective Equipmetnt என்ற பிரத்யேக ஆடையினை கரூர் மாவட்டத்தில் அபிநவ் பேப்ரிக் மற்றும் அவனிபெல்ஸ் என்ற நிறுவனங்கள் தயாரித்து வருகின்றன. உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா தொற்று பரவி வரும் நிலையில், அற்பணிப்பு உணர்வுடன் பணியாற்றும் மருத்துவர்களுக்கான பாதுகாப்பு ஆடையை இந்த நிறுவனங்கள் தயாரித்து வழங்குவது பாராட்டுக்குரியது.

வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் தற்போது இந்த ஆடைக்கான தேவை அதிகமாக இருந்தாலும், நமது கரூர் மாவட்டத்திற்கு தேவைப்படும் ஆடைகளை வழங்கிய பிறகே மற்ற ஆர்டர்கள் வாங்கப்படும் என்று உறுதியளித்து இந்த நிறுவனங்கள் பாதுகாப்பு ஆடைகளை உற்பத்தி செய்கின்றனர்.

கரூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவாமல் தடுப்பதற்குத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, ஊராட்சிகளுக்கான உதவி இயக்குநர் திரு.உமாசங்கர், மண்மங்கலம் வட்டாட்சியர் திரு.செந்தில் ஆகியோர் உடனிருந்தார்கள்

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**